## குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | **:-** | **O.S.No.236/2020** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | **:-** | **வா.சா– 01 ( PW– 01 )** |
| **பெயர்** | **:-** | **மலர்விழி** |
| **தேதி** | **:-** | **18–08–2025** |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

எனக்கு 27.03.1988 ஆம் தேதியன்று திருமணம் நடந்தது. திருமணத்திற்குபிறகு நான் என் கணவருடன் கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். என் தாயார் 20.04.1991 ஆம் தேதியன்று இறந்தார். என் தாயார் இறந்தபிறகுதான் என் தகப்பனார் இறந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் 21.10.1994 ஆம் தேதியன்று இறந்தார். வழக்கு சொத்து என் தாயாருக்கு அவருடைய தாய்வழி பாட்டி அறுதியாவண கொடையாக கொடுக்கப்பட்ட சொத்து. என் தாயார் இறந்தபின் அவருக்கு வாரிசுகளாக என் தகப்பனார், என் சகோதரர், நான் ஆகிய மூவர் மட்டும் வாரிசுகள் என்றால் சரிதான். 01- ஆம் பிரிதிவாதி என் சகோதரர் வெங்கடேசனின் மகள் என்றால் சரிதான்.

என் தாயார் உயிருடன் இருந்தவரை வழக்கு சொத்தை பொறுத்து யாருக்கும் அறுதியாவணமோ விருப்பாவணமோ எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான்.

என் தகப்பனார் அவர் இறப்பதற்குமுன் அவருடைய சொத்துக்களை பொறுத்து 19.01.1994 ஆம் தேதியன்று என் சகோதரர் வெங்கடேசன் பெயருக்கு விருப்பாவணம் எழுதி பதிவுசெய்து கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த விருப்பாவணம் சந்தேகத்திற்கு உரியது. என் தகப்பனார் சொத்துக்கள் சம்மந்தமாக பாகப்பிரிவினை கோரி நான் தாக்கல்செய்த முதலேற்பு வழக்கு எண் 290/2020 வழக்கு சேலம் 01-ஆம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தகப்பனாரின் விருப்பாவணத்தின் சான்றிட்ட நகல் பெற்று சான்றாவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தகப்பனார் எழுதி விருப்பாவணம் சந்தேகத்திற்கு உரியது என்று நான் சொல்லவில்லை என்றும் விருப்பாவண சொத்தை பொறுத்து விருப்பாவண கொடை கொடுக்க என் தகப்பனாருக்கு உரிமை இல்லை என்றுதான் சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

என் தகப்பனார் இறந்தபிறகு என் தகப்பனார் விட்டுச் சென்ற சொத்துக்கள் முழுவதையும் பொறுத்து என் சகோதரர் வெங்கடேசன் பெயரில் வருவாய் துறை ஆவணங்களில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். பொய்யாவணம் புனைந்து அவ்வாறு செய்துள்ளார்.

வழக்கு சொத்தின் புல எண், பரப்பளவு எனக்கு தெரியுமா என்றால் புல எண்கள் 199, 201/1, 201/2, 201/3 ஆகும். மொத்த பரப்பளவு 8.31 ஏக்கர். இந்த சொத்துக்களுக்கான பட்டா வெங்கடேசன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் வழக்கு சொத்து முழுவதும் எனக்கு வேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளேன். நான் அவ்வாறு கேட்கவில்லை என்றும் 2/3 பாகம் உரிமையானது என்றுதான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றும்

சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணமான என் தம்பி எழுதி வைத்ததாக சொல்லப்படும் விருப்பாவணத்தில் சொல்லியுள்ளபடி வழக்குரையின் சொத்து விவரத்தில் வீடு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. விருப்பாவணத்தில் கிணறு சம்மந்தமாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் கிணறு, Motor ஆகியன குறிப்பிடப் -பட்டுள்ளேன் என்றால் சரிதான். விருப்பாவணத்தில் இல்லாத ஒன்றை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விருப்பாவணத்தை என் சகோதரர் எழுதினார்.

வாதி தரப்பு 01- ஆம் சான்றாவணம் 05.03.2004 ஆம் தேதியிடப் -பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய நிலையில் என் தம்பிக்கு 01- ஆம் பிரதிவாதி பிறந்திருந்தாள். அப்போது 01-ஆம் பிரதிவாதிக்கு சுமார் 13 வயது இருக்கும். வாதி தரப்பு 01- ஆம் சான்றாவணத்தில் என் தம்பியின் மனைவி குறித்தோ 01-ஆம் பிரதிவாதி குறித்தோ எதுவும் சொல்லப் -படவில்லை என்றால் சரிதான். 05.03.2004 ஆம் தேதியன்று என் தம்பி விருப்பாவணம் எழுதிய உடனே அதுகுறித்து எனக்கு தெரியும்.

நான் கோயம்புத்தூரில் வசித்தேன். என் தம்பி சேலத்தில் வசித்தார். இடைப்பட்ட தூரம் 180 கி.மீ இருக்கும். என் தம்பி அந்த விருப்பாணவத்தை சேலத்தில் தயாரித்து எடுத்துவந்தாரா என்றால் இல்லை. அன்று என் தம்பி மட்டும் என் வீட்டிற்கு வந்தாரா என்றால் என் தம்பியும் கிருஷ்ணசாமி என்பவரும் வந்தனர். கிருஷ்ணசாமி எடப்பாடி ஊரை சேர்ந்தவர். என் கணவரின் தங்கையின் கணவர். விருப்பாவணம் எழுதுவதற்கு முத்திரை தாள் யார் வாங்கி வந்தது என்றால் என் கணவரும் என் தம்பியும். அந்த

முத்திரை தாளை நானும் என் கணவரும் வாங்கி வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. முத்திரை தாளில் மலர்விழி, இராக்கியப்பன் என்ற இரு பெயர்கள் உள்ளன என்றால் சரிதான்.

என் தம்பி வெங்கடேசன் 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இறந்தார். 2020 ஆம் ஆண்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது என் தம்பியின் மனைவியும் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

விருப்பாவணம் எப்படி எழுத வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியாது. விருப்பாவணம் எத்தனை முத்திரை தாளில் எழுதப்பட்டது என்றால் மூன்று. விருப்பாவணம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. விருப்பாவணம் வாசகத்தை எழுதி கொடுத்தது யார் என்று எனக்கு தெரியாது. ஆவண எழுத்தர் அந்த விருப்பாவணத்தில் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான்.

என் சகோதரரும் சகோதரரின் மனைவியும் இறந்தபின் எங்களிடம் இருந்த முத்திரை தாளை பயன்படுத்தி என் சகோதரன் எழுதிக் கொடுத்தது போன்று விருப்பாவணம் ஒன்றை புனைந்துள்ளேன் என்றால் சரியல்ல. விருப்பாவணத்தில் யார் யார் சான்றொப்பம் இட்டுள்ளது என்றால் குழந்தைவேல் என்பவரும் கிருஷ்ணசாமி என்பவரும். குழந்தைவேல் என் தோழி மலர்விழியின் கணவர். எனக்கு வேண்டிய நபர்களை சான்றொப்ப சான்றாளராக அமர்த்தி இந்த விருப்பாவணத்தை பொய்யாக புனைந் -துள்ளேன் என்றால் சரியல்ல. சான்றொப்ப சான்றாளர்கள் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பம் இட்டுள்ளனர்.

என் பெற்றோர் இறந்தபின் வழக்கு சொத்தை என் தம்பி முழுவதுமாக எனக்கு தெரிந்து அவருடைய சொந்த சொத்துபோன்று அனுபோகம் செய்து வந்தார் என்று சொன்னால் தவறு. நான் பொய்யாவணங்களை புனைந்து கொண்டு 01-ஆம் பிரதிவாதிமீது பல்வேறு பொய் வழக்குகளை தொடுத்து அவரை அலைக்கழிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் தம்பி இறந்தபிறகு அவர் உயிருரோடு இருந்தபோது என் கணவரிடம் 40 இலட்சம் உரூபாய் கடன் வாங்கியிருந்தார் என்று சொல்லி 01-ஆம் பிரதிவாதிமீது என் கணவர் முதலேற்பு வழக்கு எண் 252/2020 என் வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கு கோயம்புத்தூர் 01-ஆம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நான் ஒருபோதும் கூட்டு சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்றும் என் தம்பி இறக்கும்வரை அவரும் அவருக்கு பிறகு அவருடைய மனைவியும் அதன்பிறகு 01-ஆம் பிரதிவாதியும்தான் தனிப்பட்ட முறையில் அனுபோகம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. அதனால்தான் என் தாயார் இறந்தபிறகு வழக்கு சொத்தை பொறுத்து என் தம்பியின் பெயரில் மட்டும் பட்டா வழங்கப்பட்டது என்றும் அவர் இறந்தபிறகு அவருடைய மனைவி மற்றும் 01-ஆம் பிரதிவாதியின் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் நான் உள்ளேன் என்று காட்ட வருவாய் துறை ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை.

01-ஆம் பிரதிவாதிதான் வழக்கு சொத்தை முழுவதுமாக அனுபோகம் செய்துவருகிறார் என்றும் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இல்லாத நான் அவருக்கு எதிராக தடையுறுத்துக்கட்டளை நிவாரணம் கோரமுடியாது

என்றும் சொன்னால் சரியல்ல. 01-ஆம் பிரதிவாதி 02-ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தபின் மீண்டும் 01-ஆம் பிரதிவாதியே 02-ஆம் பிரதிவாதி -யிடமிருந்து கிரையம் வாங்கிவிட்டார் என்றும் அதனால் 14.12.2018 ஆம் தேதியிட்ட கிரைய பத்திரத்தை செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் விருப்பாவணத்தை பொய்யாக புனைந்துள்ளேன் என்றும் வழக்கில் கோரியுள்ளபடி எனக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் செலவுத் தொகையை 01-ஆம் பிரதிவாதிக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.